# யாழ்ப்பாணத்தின் சாதி அமைப்பு



**வ.ஐ.ச. ஜெயபாலன்**

இலங்கைத் தீவின் நிலவுடைமை அமைப்பையும் சாதி அமைப்பையும், சிங்கள அமைப்பு, தமிழ் அமைப்பு என இரு பிரிவுகளாக வகுக்கலாம்.

சிங்கள அமைப்பில் - கோட்பாட்டு ரீதியாகச் சிங்கள அமைப்பில் நிலம் அரசனுக்குச் சொந்தமானது. சாதிவாரிச் சேவைகளுக்காக (ராஜகாரியம்) எல்லாச் சாதியினரும் நிலத்தை மானியமாகப் பெறுவார்கள். 'ரொடி' போன்ற ஓரிரு சிறு சாதிகள் புறநடையாக இருப்பினும் சாதிவாரிப் பணிகளுக்காக, எல்லாச் சாதியினருக்கும் மானியமாக - அளவு, தரம் ரீதியான பேதங்கள் இருப்பினும் நிலம் கிட்டும். கோட்பாட்டு ரீதியாக ஆண் வாரிசு இன்றி இறத்தல், சாதிவாரிப் பணிகளை ஆற்றத் த்வறுதல் என்பனவற்றுக்காக அரசன் நிலத்தை மீளப்பெற முடியும். ஆனால் மேற்படி நிலம் எந்தச் சாதியைச் சேர்ந்தவருக்குச் சொந்தமாக இருந்ததோ அதே சாதியைச் சேர்ந்த ஒருவருக்கே திரும்பவும் வழங்கப்படவேண்டும். அளவு, தரம் தொடர்பான மாறுபாடுகள் இருப்பினும் உற்பத்திக் காரணியான நிலம், எல்லாச் சாதியினருக்கும் பகிரப்பட்டிருந்த நிலைமையினாலும், கிராமங்கள் தனிச்சாதி அடிப்படையில் அமைந்திருந்த நிலைமையினாலும், சிங்களப் பகுதிகளில் பல்வேறு சாதியினரிடையே சுதந்திரத்தன்மை நிலவியது. அங்கு வர்க்க ஒடுக்குதல்கள் சாதிவாரித் தன்மை பெறுகிற வாய்ப்பும், சாதி, ஒரு கொடுமையான ஒடுக்கும் அமைப்பாகத் தோற்றம் பெறும் வாய்ப்பும் - ஒரு சில பிரதேசப் புறநடைகளுடன் - குறைவாகவே இருந்தது. இத்தகைய சமூக, பொருளாதார பின்னணியினால் சிங்களப் பகுதிகளில் அரசியல் ரீதியாகச் சாதிவாரியாக அணிதிரளவும், வளங்களுக்கும் வாய்ப்புகளுக்குமாகச் சாதிவாரியாகப் போட்டியிடவும் தக்க சூழல் அங்கு உருவாகியது. இத்தன்மை, கண்டியைவிட கரையோரச் சிங்களப் பகுதிகளில் அதிகம் இருந்தது. இதற்கு அமரபுர நிக்காயாவின் தோற்றமும், பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் கரையோரச் சிங்களப் பகுதிகளில் மையப்பட்டமையும் தக்க சான்றாதாரமாகும்.

தமிழரது நிலவுடைமை அமைப்பு தனியார் நிலவுடைமை அமைப்பாகும். கண்டிய சிங்கள அரசின் கீழ், தமிழ், முஸ்லிம் வன்னிமைத் தலைவர்களால் பரிபாலிக்கப்பட்ட கிழக்கு மாகாணத் தமிழ்ப் பகுதிகளில்கூட சிங்கள நிலவுடைமை அமைப்போ சாதியமைப்போ நிலவவில்லை. தமிழரது நிலவுடைமை அமைப்பான தனியார் உடைமை அமைப்பும், தமிழ்ச் சாதியமைப்புமே அங்கும் நிலவியது. திருகோணமலையில் யாழ்ப்பாண அடிமை முறை நிலவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சிங்களச் சாதி அமைப்பில், கண்டியச் சிங்களப் பகுதிகளிலும் சரி, கரையோரச் சிங்களப் பகுதிகளிலும் சரி, வெள்ளாளரின் சிங்களப் பிரதியான 'கொவிகம' சாதியினரின் தொகை ரீதியான, கலாச்சார ரீதியான முதன்மை இருந்தது. தமிழ்ச் சாதி அமைப்பில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே - வன்னிமாவட்டத்தில் சரி கிழக்கு மாகாணத்தில் சரி - வெள்ளாளர் முதன்மை இருக்கவில்லை. யாழ்ப்பாணத் தமிழரது சாதியமைப்பின் முக்கிய அம்சம் சாதிவாரி விவசாய அடிமை முறையாகும். இத்தகைய முறைமை சிங்களவர்கள் மத்தியில் அறியப்படவில்லை.

தமிழரது சாதி அமைபபை, யாழ்குடா நாட்டின் சாதி அமைப்பு, ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் சாதி அமைப்பு என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

யாழ்ப்பாணத்துச் சாதிவாரி சமூகத்தை, சுதந்திரர், அடிமைகள் (சாதிவாரி உழைப்பிற்காகச் சுதந்திரனான தனியார் ஒருவனுடனும், அவனது நிலத்துடனும் பிணைக்கப்பட்டவர்கள்), குடிமைகள் (தனியாருடனோ நிலத்துடனோ இணைக்கப்படாதபோதும் சாதிவாரி சேவைகளுக்காகக் கோவிலுடனும், கிராமங்களுடனும் இணைக்கப்பட்டு சொந்தக் குடியிருப்பில் வாழ்பவர்கள்) என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

யாழ்ப்பாணத்தின் குடிமைச் சாதிகள் பல்வேறுபட்டவர்கள். மிகச் சிறுபான்மையானவர்கள். இவர்களுட் பெரும்பான்மையினரான வண்ணார்கூட, மொத்தக் குடித் தொகையில் ஏறக்குறைய 1.7 சதவீதம்தான். இவர்கள் கிராமத்து வெள்ளாளர் முழுமைக்கும் சேவை வழங்க வேண்டியவர்கள். இவர்கள், குறிப்பிட்ட ஒரு வெள்ளாளரின் நிலத்துடனோ, பணிகளுடனோ பிணைக்கப்பட்டவர்களல்ல. தத்தமது சொந்த நிலத்தில் வாழ்ந்த இவர்கள் கோட்பாட்டு ரீதியாகப் பெரும்பாலும் சுதந்திரமானவர்கள்.

யாழ்ப்பாணச் சாதியமைப்பின் கீழ் வண்ணார், அம்பட்டர், பறையர், துரும்பர் சாதியினரும், இவர்களுடன் சாதிவாரி அடிமைகளுள், சூத்திரரான கோவியர் புறநீங்கலாக, நளவரும் பள்ளரும் நாற்பாலுக்கு வெளியில் பஞ்சமர் அமைப்பினுள் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளனர். மொத்தக் குடித்தொகையில் பஞ்சமர்கள் ஏறக்குறை 15 சதவீதத்தினர். (1824 புள்ளிவிவரம்)

தமிழகச் சாதி அமைப்பில், பறையர்கள், நிலத்துடன் பிணைக்கப்பட்ட பண்ணையாட்களாக இருந்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் பறையர்கள் அடிமைப் பிரிவினர் அல்ல. பறையருள் வெள்ளாளரின் குடிமைகளாக இருந்தவர்கள் கோவியப் பறையர் என அழைக்கப்பட்டனர். இதைவிடப் போத்துக்கீசராலும் டச்சுக்காரராலும் சாயவேர் (அவுரிவேர்)

**மீனவர்களது தொழில் மூலப்பொருளான மீன், விரைவில் சேதப்படக் கூடியதும், உப உணவுத் தன்மை வாய்ந்ததுமாகும். மீனை அவர்கள் வெள்ளாளருக்கு விற்று, பிரதான உணவுப் பொருளான தானியத்தை வெள்ளாளரிடமிருந்து பெற வேண்டியிருந்தது. இத்தகைய பரிமாற்றத் தொடர்புகளாலும், தொகை ரீதியான சிறுபான்மைத் தன்மையாலும்கூட ஒருவகையில் அவர்கள் வெள்ளாளர்களைச் சார்ந்திருக்க நேர்ந்தது.**

சேகரிப்பதற்கும், நெசவு, துணி சாயம் போடுதல் போன்ற வேலைகளுக்குமாகத் தமிழகத்தில் பண்ணையாட்களாக இருந்த பறையரையும் பள்ளரையும் கொண்டு வந்தார்கள். இவ்வாறு அன்னிய அரசுகளால் கொண்டுவரப்பட்ட பறையர்களும் பள்ளர்களும், ஏற்கனவே நிலவிய யாழ்ப்பாணச் சாதிய முறைமையின் கீழ், முறையே குடிமைகளாகவும் அடிமைகளாகவும் அடையாளப்படுத்தப்பட்டனர். எனினும் இவர்கள் சுதந்திரமானவர்கள். அன்னிய ஆளுனர்களின் பணியாளர்களாக இருந்த இவர்களுக்குக் குடியிருப்பு நிலம் சொந்தமாக இருந்தது. இவர்களது சாதிப் பெயருக்கு முன்னர், அடைமொழியாக, இவர்கள் ஈடுபடுத்தப்பட்ட மரபு சாராத பணிகளின் பெயர்கள் அமைந்தன. உதாரணம் வேர்க்குத்திப் பறையர், சாயக்காரப் பறையர், வேர்க்குத்திப் பள்ளர், செருப்புக்கட்டிப் பள்ளர் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

நளவர்களுள் ஒரு பகுதியினர் டச்சுக் கம்பனியரின் அடிமைகளாக இருந்தனர். இவர்களும் சுதந்திரமானவர்கள். இவர்களுக்கு உதாரணமாக கம்பனி நளவர், கோட்டை காத்த நளவர் என்பவர்களைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், கரையோர மீனவர் கிராமத்து நிலங்களும், மீன்பிடிச் சாதனங்களும் புறநீங்கலாக வெள்ளாளனே நிலம், ஏனைய உற்பத்திக் காரணிகள் என்பனவற்றின் ஏக உடைமையாளனாக இருந்தான். மீனவர் கிராமங்களில், நிலமும் கருவிகளும், கரையார், திமிலர், முக்குவர், பள்ளு விரியர் போன்ற பல்வேறு மீனவச் சாதியினரின் உடைமையாக இருந்தது. யாழ் மாவட்டத்தில் மீனவர்களுள் கரையாரே பெரும்பான்மையினர். இவர்களுள் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்கள், சமயவாரி அகமண வழக்கம் காரணமாக, நடைமுறையில், ஒரு தனிச் சாதிப்பிரிவினராக வளர்ச்சி பெற்றுவிட்டனர். இது ஏற்கனவே சிறுபான்மையாக இருந்த மீனவர்களை மேலும் பிளவுபடுத்தியது. யாழ்ப்பாணச் சாதியமைப்பில், வெள்ளாளரைத் தவிர்த்து மீனவர்களுக்கே சொத்துடைமையும், சமூக ஆதிக்கமும் இருந்தது. அவர்களும கடற்புறத்துக் கிராமங்களில் நிலத்துக்கும் உற்பத்திக் காரணிகளுக்கும் சொந்தக்காரர்களாக இருந்தனர். எனினும் கலாச்சார ரீதியாக அவர்கள் வெள்ளாளரை விடப் பிற்படுத்தப்பட்டிருந்தனர்.

மீனவர்களது தொழில் மூலப்பொருளான மீன், விரைவிற் சேதப்படக் கூடியதும், உப உணவுத் தன்மை வாய்ந்ததுமாகும். மீனை அவர்கள் வெள்ளாளருக்கு விற்று, பிரதான உணவுப் பொருளான தானியத்தை வெள்ளாளரிடமிருந்து பெற




வேண்டியிருந்தது. இத்தகைய பரிமாற்றத் தொடர்புகளாலும், தொகை ரீதியான சிறுபான்மைத் தன்மையாலும்கூட ஒருவகையில் அவர்கள் வெள்ளாளர்களைச் சார்ந்திருக்க நேர்ந்தது. வெள்ளாளத் தலைவர்களுக்கும், கரையோரத் தலைவர்களுக்குமிடையிலான பிளவுகளும் மோதல்களும் யாழ்ப்பாண வரலாற்றின் முக்கிய அம்சமாகும். இதற்கு இலக்கியச் சான்றாதாரமாக, நாடக நூலான "பூதத்தம்பி விலாசத்"தைக் குறிப்பிடலாம்.

கடற்புறத்து மீனவக் கிராமங்கள் புறநீங்கலாக, பெரும்பாலான யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் பல்சாதிக் கிராமங்கள் ஆகும். இங்கெல்லாம் வெள்ளாளனுக்குச் சாதிவாரியான பெரும்பான்மை இருந்தது. நிலத்தினதும்

உற்பத்திக் காரணிகளதும் பெரும்பகுதி வெள்ளாளரது உடைமையாகும். ஏனைய அடிமை குடிமைச் சாதியினர் ஏதோ ஒருவகையில் வெள்ளாளரைச் சார்ந்து வாழவேண்டிய நிலை, இங்கெல்லாம் இருந்தது. இது யாழ்ப்பாண மாவட்டத்தில் பருமட்டத்தில் மட்டுமன்றி கிராமியக் குறுமட்டத்திலும் வெள்ளாளரது ஆதிக்கத்தைப் பலப்படுத்தி நிறுவனமயப்படுத்தியது.

சிறு நீர்ப்பாசனக் குளங்கள் சார்ந்த வன்னிக் கிராமங்கள் பெரும்பாலும் தனித்தனி சாதிக்கிராமங்களாக அமைந்தன. இத்தகைய கிராமிய அமைப்பில் சாதிய ஒடுக்குதலுக்கான வாய்ப்புகள் குறைவாகவே அமையும்.

திருமலை மாவட்டத்தின் பெரும் பகுதியிலும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் பிரதேசரீதியான தனிச்சாதிப் பரம்பல் அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தின் வடபுலம், பெரும்பாலும் விவசாயிகளாக மாறிவிட்ட கரையாரின் கையிலும், தெற்குப் புலம் முக்குவரின் கையிலும் இருந்தது. இப் பகுதிகளில் நிலப்பஞ்சம் இருக்கவில்லை. நிலவுடைமையும் நிலமின்மையும் ஒரே சாதியினுள் அமைகிற கிராமங்களிலும், பிரதேசங்களிலும் சாதிவாரியான ஒடுக்குதலுக்கான வாய்ப்புகள் அதிகமில்லை.




இத் தனிச் சாதிப் பிரதேசங்களில் மிகச் சிறுபான்மையினராக வாழும் அம்பட்டர், வண்ணார் போன்ற தாழ்த்தப்பட்ட சேவைச் சாதிகளின் (குடிமைகள்) அனுபவங்கள் புறநடையாக அமையலாம்.

யாழ்ப்பாணச் சாதி அமைப்பின் முக்கியமான அம்சம் 'சமூகரீதியாக' ஒடுக்கப்பட்ட சாதியினரின் பெரும் பகுதியினர் ஒடுக்கப்பட்ட சாதியினராக மட்டும் இல்லாமல் வெள்ளாளரினது அடிமைகளாவும் இருந்ததுதான்.

யாழ்ப்பாணத்துச் சாதியமைப்பில் முக்கியமான ஒரு பிரிவினர், கோயில் சார்ந்த சேவைச் சாதியினரான சாதிவாரிக் கலைஞர்களாகும். இவர்களுள் வீரசைவர்கள், நட்டுவர்கள் (இசைவேளாளர்கள்) குறிப்பிடத்தக்கவர்கள். கிராமியவழக்கில் 'பண்டாரம்' என்றும் குறிப்பிடப்படுகிற வீரசைவர்கள், கன்னடத்தைச் சேர்ந்த 'லிங்காயுதர்'களின் வம்சா வழியினராவர். வீரசைவர்கள், கோவில் பூசகர்களாகவும், உடுக்கு, கரகம், அனுமார், புலி ஆட்டக் கலைஞர்களாகவும் விளங்கினர். நட்டுவர்களான யாழ்ப்பாணத்துத் தவில், நாதஸ்வர வித்துவான்கள் பலர், தென்னாசியப் புகழ்பெற்றவர்கள்.

இந்த இரண்டு பிரிவினரும் அளவெட்டி வடக்குக் கிராமத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர்.

இவர்களைவிடப் 'பண்டாரம்' என்று குறிப்பிடப்படுகிற பிறிதொரு கோவில் சேவைச் சாதியினர் வட்டுக்கோட்டைத் தொகுதியில் பரவலாக வாழ்கின்றனர்.

## யாழ்ப்பாண மாவட்டத்தின் அடிமை முறை

திருமலை நகரம் புறநீங்கலாக யாழ்ப்பாணத்துக்கு வெளியே குறிப்பிடத்தக்க வகையில் சாதிவாரி அடிமை முறை, தமிழ்ப் பகுதிகளிலோ சிங்களப் பகுதிகளிலோ இருக்கவில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும், திருமலைக்கும் வெளியே இலங்கை

**தேச வழமைச் சட்டப்படி நளவரும், பள்ளரும், கோவியரும் சாதிவாரி அடிமைகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களை விற்கலாம், வாங்கலாம், சீதனமாகக் கொடுக்கலாம். நகை நட்டுப் போல அடமானமாகவும் வைக்கலாம்.**

அடங்கிலும் மிகச் சில வீட்டுப் பணியாட்களே அடிமைகளாக இருந்துள்ளனர்.

1824ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணிப்பின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் 12.5 வீதத்தினரும், திருமலை மாவட்டத்தில் 6.9 வீதத்தினரும் அடிமைகளாக இருந்தனர். ஏனைய பகுதிகளில், கொழும்பில்தான் அதிக அடிமைகள் இருந்தனர். இவர்கள் வீட்டுப் பணியாளர்கள். இருப்பினும் கொழும்பில் அடிமைகளின் வீதம் 0.3 மட்டுமே.

தேச வழமைச் சட்டப்படி நளவரும், பள்ளரும், கோவியரும் சாதிவாரி அடிமைகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களை விற்கலாம், வாங்கலாம், சீதனமாகக் கொடுக்கலாம். நகை நட்டுப் போல அடமானமாகவும் வைக்கலாம்.

அடிமைச் சாதியினருள் பள்ளரைத் தவிர கோவியரும் நளவரும் தமிழகத்தில் இல்லை. நளவர், பஞ்சங்களின் போது, வெள்ளாளரால் அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்ட மலையாளத்து ஈழவர் என்ற கருத்துப் பொதுவாக உள்ளது.

கோவியர்கள், கலாச்சார ரீதியாக, வெள்ளாளருக்குச் சமதையான, பொதுவாக வடுகர் என்று குறிப்பிடப்படும் தெலுங்குச் சூத்திரச் சாதியைச் சேர்ந்தவர்கள். தென்னகப் பஞ்சங்களின்போது வெள்ளாளர்களால் அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்டவர்கள். ஏனைய சாதியினரைப் போல வெள்ளாளரும் கூட, அரசுக்கு, சிங்களத்தில் இராஜகாரியம் எனவும், தமிழில் ஊழியம் எனவும் ஐரோப்பிய மொழிகளில் 'கோவி' (Corvee) எனவும் அழைக்கப்பட்ட கட்டாய சேவையை வழங்க வேண்டியிருந்தது. இது தொடர்பாக வெள்ளாளர்களுக்கிருந்த சலுகைகள் யாவும், அரசுப் பணிகளும் ஊழியத்தின் தேவையும் அதிகரித்ததால், போத்துக்கீசர் காலத்திலேயே ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. ஊழியம் செய்யும் ஏனைய வெள்ளாளர்களுடன் சேர்ந்து பணிபுரிவதற்காக, அடிமைச் சொந்தக்காரர்களான வெள்ளாளர்கள், பஞ்சமர் சாதியைச் சேர்ந்த அடிமைகளுக்குப் பதிலாக, சாதிவாரியாகத் தமக்குச் சமமானவர்களை அனுப்ப வேண்டியிருந்தது. வெள்ளாளர்களுள் மேம்பட்ட பிரிவினரான அடிமைச் சொந்தக்காரர்கள், தமக்குப் பதிலாக ஊழியம் செய்வதற்காக 'வடுகர்' சாதியைச் சேர்ந்த அடிமைகளை அனுப்பினார்கள். வடுகர்கள் 'கோவி' என போத்துக்கீச, டச்சு ஆவணங்களில் எழுதப்பட்டனர். இதுவே பின்னர் அவர்களது சாதிப் பெயராயிற்று. இதனால் வடுகர்கள் உத்தியோக பூர்வமாக 'கோவி' எனப் பெயர் பெற்றனர்.

திருமலையில் இருந்த அடிமைகள் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கே உரிய, வெள்ளாளரின் சாதிவாரி அடிமைகளான கோவியர்களாக இருந்தமை, திருமலை மாவட்டத்திற்குப் புலம் பெயர்ந்த யாழ்ப்பாணத்து வெள்ளாளரால் அடிமைகள் அங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற கருத்துக்கு இடம் தருகிறது. இவர்கள் துறைமுகம் சார்ந்த பணிகளிலும், விவசாயத்திலும் ஈடுபடுத்தப் பட்டிருக்கலாம். கிழக்கு மாகாணத்தில் வரலாற்று ரீதியாக ஓரளவுக்கேனும் யாழ்ப்பாணத்தின் செல்வாக்குள்ள பகுதியாக, திருமலை நகர்ப்பகுதி இருந்து



## வாழ்வாறு

குறை நிறை
கலந்தோடுமுன் ஆறு.
சில கணவர்களால்
சபிக்கப்பட்டாலும் உனக்கு
அவர்தம் மனைவியர்கள்
ஆசிர்வாதமும் வாய்த்தது,
சுக துக்கத்தோடு
பேராறாய்ப் பெருக்கெடுக்கையில்
புரிந்ததெனக்கு.

- சூரியசந்திரன்

வந்துள்ளது. எனினும் திருமலையில் யாழ்ப்பாணத்தைப்போல சாதி ஒடுக்குதல் வளராமைக்கான காரணங்கள் ஆராயப்படவேண்டும்.

திருமலையில் அடிமைகளாக இந்த கோவியர்கள், கலாச்சார ரீதியாக வெள்ளாளருக்குச் சமமானவர்களாகவும், வெள்ளாளரது உள்வீட்டுப் பணியாளர்களாகவும், சட்டரீதியாக அடிமைகளாக இருந்தபோதும் நடைமுறையில் பெரும்பாலும் வெள்ளாளரது வாரக் குடிகளாகவும், அடிமை ஆளணி முகாமையாளர்களாகவும் இருந்தவர்கள். 1844ல் சட்டரீதியாக அடிமை முறை ஒழிக்கப்பட்டபோது நிலப் பஞ்சமற்ற திருமலையில் கலாச்சார ரீதியாக வெள்ளாளருக்குச் சமதையாக இருந்த கோவியர்கள் பொருளாதார ரீதியாகவும் விடுதலை பெறுவதில் அதிகம் சிரமம் இருந்திருக்காது என்று கருதலாம். யாழ்ப்பாணத்து நிலைமை மாறுபட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, ஆங்கிலேய அரசாங்க அதிபர்களால் 1850களில் 'போடி' நிலவுடைமையாளர்களின் ஆதிக்கம் தகர்க்கப்பட்டு, போடியாரின் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்த வாரக்குடிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு வாவியின் மேற்குக் கரையில் விவசாயத்துக்கும் குடியிருப்புக்கும் நிலம் வழங்கப்பட்டது. இது, விடுவிக்கப்பட்ட வாரக்குடிகளின் சமூக, பொருளாதார, கலாச்சாரச் சுதந்திரத்துக்கு வழிவகுத்தது.

1844ல் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண மாவட்ட நிலைமையைக் கருத்தில் கொண்டு 'அடிமை விடுதலைச் சட்டத்தை' இயற்றினர். இதற்கு முன்னர், படிப்படியாக அடிமை விடுதலையை ஏற்படுத்துவதற்காக பிரிட்டிஷார் கொண்டுவந்த எல்லாச் சட்ட ஏற்பாடுகளும் வெள்ளாளர்களால் முறியடிக்கப்பட்டது. 1844ஆம் ஆண்டுச் சட்டம், சட்டரீதியான அடிமை விடுதலைக்கு வழிவகுத்த போதும் மேற்படி சட்டத்தின் கீழ், அடிமைச் சாதியினருக்குக் குடியிருப்பு நிலம் கூட ஏற்பாடு செய்யப்படவில்லை. குடியிருப்பு நிலமின்மை, மரபு சாராத மாற்றுத் தொழில் வாய்ப்பு இன்மை என்பவை அவர்களைத் தொடர்ந்து வெள்ளாளரது நிலங்களில் பிணைத்து வைத்திருந்தது. இந்நிலை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பெரியமாற்றம் எதுவுமின்றித் தொடர்ந்தது. 1850களில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வாரக்குடிகள் விடுவிக்கப்பட்டபோது அவர்களுக்குக் குடியிருக்கவும், பயிர் செய்யவும் நிலம் ஏற்பாடு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்)

ஜனவரி 1967 இதழ் ம.பொ.சி.யைப் பேட்டி
டு, அவரது உருவத்தை அட்டையில் தாங்கி வந்
கணையாழியின் முதல் சிறுகதைப் போட்டியில்,
மதி வாசந்தி, திருவாளர்கள் நகுலன், எஸ்.விஸ்வ
ன், சிவம், ந.முத்துசாமி ஆகிய ஐவரது கதை
ம் பரிசு பெற்றிருந்தன.

டில்லி- 'தில்லை சிவன்' என்பவர் அடிக்கடி
ச்னைக்குரிய கடிதங்களையும் கட்டுரைகளையும்
தி வந்திருக்கிறார். இந்த இதழில் 'க.நா.சுவின்
வரிசை' என்ற தலைப்பில் க.நா.சுவின்
ர்சனப் போக்கைக் கண்டித்து எழுதியிருக்கிறார்.
கியின் எழுத்து பற்றி, டில்லியிலிருந்து வரும் ஒரு
கிலப் பத்திரிகையில் ஒரு விமர்சனத்தை எழுதி,
றவர்கள் நம் நவீன இலக்கிய எழுத்துத் தரத்தைத்
ழ்வாக மதிப்பிட வாய்ப்பளித்ததைக் குறை
யிருக்கிறார். 'கல்கி'யின் நாவல்களில் குற்றங்கள்
க்கலாம். ஆனால், அவற்றை விஸ்தரித்து மிகைப்
த்துவது நவீனத் தமிழ் எழுத்துலகுக்கு அவர்
ய்த தொண்டிற்குக் கைமாறாகாது' என்று
நங்கப்பட்டிருந்தார்.

## ல்கியின் எழுத்து பற்றி க.நா.சு.

**கல்கியின் எழுத்தில் தனித்தன்மை இல்லை.
வருடைய எழுத்தோவியங்களை இலக்கியப்
டைப்புக்கள் என்று சொல்ல முடியாது.... ஆரம்ப
ாலங்களில் கல்கி பெரும்பாலும் நகைச்சுவை
ழுத்தாளராகவே விளங்கினார். இந்த நகைச்சுவை,
திகப் பிரபலமல்லாத சில ஆங்கிலப் படைப்புக்களை
தாரமாகக் கொண்டிருந்தது – ஸ்டீஃபன் லீகாக்,
ார்க் ட்வைன், ஜெரோம்கே.ஜெரோம் ஆகியோரின்
டைப்புகள்தாம்...**

**"ஜனரஞ்சகமான சில ஆங்கிலச் சஞ்சிகைகளின்
றிஸ்துமஸ் மலரில் வெளியாகும் கதைகளைத்
ருட்டுத்தனமாகத் தழுவி எழுதினார் கல்கி. இந்த
லர்களில் ப்பால்வான்ஹேஸே, லியனார்ட் மொரிக்ஸ்
ோன்றோர் எழுதிய கதைகள் அவை... பிற்பாடு
ல்கி எழுதிய சரித்திர நாவல்களின் முக்கியத்
ிருப்பங்கள், பாத்திரங்கள் பிற எழுத்தாளர்களின்–
அலெக்ஸாண்டர் டூமாஸ், லார்ட் லிட்டன், ஸர்.
வால்டர் ஸ்காட்–படைப்புகளை ஒட்டி அமைந்தவை...**

**"தமிழ்ச் சமூக நாவல்களில் அனேகம், சார்ல்ஸ்
கார்வைஸ், உய்டா, டயூ மூரிர் இ.எம்.அல்பேனெஸி
ஆகியோரின் படைப்புகளே 'மாறுவேஷ'த்தில்...**

இந்திய தேசம் விடுதலையடைந்து ஒரு
இளைஞனின் வயதும் ஆகிவிட்டது. இருந்
தும் 'க.நா.சு.'வைப் போன்றோரின் மனத்தி
லிருந்து இன்னும் அடிமையுணர்வு விலக
மறுக்கிறது. தமிழ் எழுத்திற்கு இன்னும்
ஆங்கில எழுத்தை அளவையாகக் கொள்ள
வேண்டுமா? தமிழ் எழுத்தாளனின் மீதுக்
கற்பனைக் குற்றங்கள் சாற்றுவதற்குப்
பெயர் விமர்சனமா? ஆங்கிலத்தில்,
ஆங்கிலேயனும் வியக்க எழுதும் ஆர்.கே.
நாராயண் பிறந்த பின்பும் தமிழனின்,
தரமாக எழுதும் திறமையை ஒரு தமிழன்
கேலி செய்வதா? வெட்கக்கேடு! வேலியே
பயிரை மேய்வதை விமர்சனமென்றா கூறு
வது?

இருப்பது ஒரு விமர்சகன்; அவரும்
'கரையான்' வேலை செய்கிறார். இவர்
இவரைக் காப்பியடிக்கிறார். அவர்
அவரைக் காப்பியடிக்கிறார். 'இது இதைத்
தழுவியது. அது அதைத் தழுவியது... 'இது
இவ்வளவு பக்கம், அது அவ்வளவு பக்கம்'...

–தில்லைச் சிவன்.






**கணையாழி : மொழிபற்றி – இந்தி
பற்றி உங்களது கொள்கை என்ன?**

ம.பொ.சி: அரசாங்க மொழி, கல்வி மொழி,
நீதிமன்ற மொழி எல்லாம் தமிழில் இருக்க
வேண்டும். தேசிய மொழி என்று வரும்போது
இந்நாட்டு மொழி ஒன்றுக்குத்தான் அந்த
அந்தஸ்து இருக்க வேண்டும். வேற்று நாட்டு
மொழிக்கல்ல. இந்த வகையில் பார்த்தால்
நாம் இந்தியை ஏற்கவேண்டும். ஆனால்
தமிழ்நாட்டில் தமிழுக்கே முதலிடம் தரப்பட
வேண்டும். ஆங்கிலத்துக்கும், இந்திக்கும்தான்
போட்டி. தமிழுக்கும், இந்திக்கும் அல்ல
என்பதை உணர்ந்து கொண்டால் பிரச்னை
தீர்ந்து விடும்.

– ம.பொ.சி. பேட்டியிலிருந்து.

இமைப்பீலித்தீண்டி தடவியதனால்
விண்டலம் நீலமதைக் கலந்திடும்
மேகங்கள் வந்துத் துடைத்து விலக்கிச்
சித்திர
மேலாடை மீண்டும் ஒன்றாகி களை இழந்தது.

முன்பு வைகறைவானின் கன்னத்தில்
குங்குமம் காற்று கவர்ந்தெடுத்த ஓர் நாள்
குழந்தை விளையாட்டிலிருந்து தாத்பரியங்கள்
விட்டொழிந்த மனமும் உடலும்
நினைத்துச் சிரிக்க காரணம் தேடாமல்
புளகாங்கித மடைந்திட எதுவுமே வேண்டாது
மயிர்க்கால்களில் முழுக்க முழுக்க
பூ பூப்பதாய் தோன்றிய இளமை
நாட்களில் பிரேமைத்தேன் தேடி நின்றவள்.
பார்க்காமல் பார்க்காமல் பார்த்து வளர்ந்தவள்
பார்ப்பதற்கு முன்னமேயே மையலாகிப் போனவள்
நேற்றைய ஆவியின் கௌரவ மாண்டவள்
இன்று துயரக் கண்ணீர் விக்கிரகமானவள்
உடைந்துச் சிதறிய இதயம் தாங்கி நிற்பவள்
கஷ்டகாலத்தின் கருங்கொடியானவள்
கோபத்தீயதை கண்ணீரால் அணைத்தவள்
கோபத்தீயில் கண்ணீரை மாய்த்தவள்
பேரிடி மின்னலை புன்முறுவல் ஆக்குபவள்
பெரும்புயலையும் மூச்சாய் விடுகிறவள்
ஒவ்வொரு மரமதில் தன் சிதை காண்பவள்
ஒவ்வொரு கம்பிலும் பிணக்கொள்ளி கண்டவள்
நீறிப் புகைந்திடும் பிரபஞ்சம் அறிந்தவள்
நேரில் பொசுக்கிடும் கானகத் தீயானவள்
காட்டுக்குள்ளிருந்து கேட்டது சிலம்பின்
காதைபோல் ஏதோ மதுரமாய் உருக்கிடும்
ஒலியலைகள்

பூவின்று வேண்டுமது கடும் நிறமல்ல
பூவின்று வேண்டுமது மிருதுவானதல்ல
பூவின்று வேண்டுமது புதுமணமல்ல
பூவின்று வேண்டுமது நறுதேனுமல்ல
பூவின்று வேண்டுமது மகரந்தப் பொடி மட்டும்!

மற்றவை யாவும் மற்றவர்க்காக
மற்றவர் இதை அறிந்திடாரன்றோ


பூக்காலம் வருவதின் முன்னறிக்கை
கேட்பதற்கு முன்பே வேரிலெங்கோ
த்தும் கொஞ்சலாய், மயிர்கூச்செரிதலாய்
மாவியப்பாய், புன்முறுவலாய்
நாணமாய் பின் படர்ந்து படர்ந்து ஏற
கம்போடு கம்பு கம்பித்திரியாக,
வளர் கிளைகளையாட்டியாட்டி கெட்டகனா
பல்லவி கேட்க வைத்து மேலாக கீழாக
மூச்சிரைக்கப் புணர்ந்து வரும்
பூக்களுக்கு வேண்டுவது மகரந்தப்பொடி
மட்டும்தானா?

சோழ நாட்டின் செழிப்பைத் துறந்து
பாண்டி நாட்டின் பெருமையை விடுத்து
சேர நாட்டில் கொடுங்கல்லூர் வந்திட
இப்பிறவி, அது இத்தனை நீண்டதா?
மத்தியானம், மலையிடுக்கில் நிழல்
மெத்தையில் சற்று தியானம், என்றினி
இப்பிறவிக் கடன் தீர்ந்திடும்? பகல்
முடிந்திடும் முன் நேராய் கடற்கரை
சேர வேண்டும், இருகடல் இணைத்திடும்
கடமையோ என் பிறவி இங்ஙனம்
திசை பாலகர்களிடம் கேட்டு நடக்கையில்
யாரிவன் மெல்லிய கற்பனைக்கணைகள்
அள்ளியெடுக்க துணிந்திட்ட இளமுறைத்
தம்பிரானோ? வழி தவறிய சித்தனோ?
பூவினைத்தேடி நடந்திடும் பாடகனோ?
கனவுப் பயணியோ? கனவோ?
தமையன் இமயம் வென்று கையடக்கையில்
நாட்டதின் துயரைப் பகர்ந்த கண்ணாடியா?
கேட்கின்றது தன வாழ்வின் சோகமாம்
நீரோட்டமாய் ஒலித்திடும் சந்தங்கள்
ஒற்றைச் சிலம்பு தெறித்து விழுந்ததால்
மேற்கு தொடுவானின் நெற்றியில்
எரிகிறது, வானம் எரிந்து படர்கிறது
கரும்புகை மண்டிய மேகபடலங்கள்
எந்த நரக நெருப்பு, எந்த நகர நெருப்பு
எந்த சிதை நெருப்பில் காப்பியம் பிறந்தது?
ஏதோ பழைய கதையில் எவரின்
வேதனை எடுத்தாளும் இளமுறைத்
தம்பிரான்?
ரத்தமும் சதையும் பச்சைக் கவிதையாய்
விக்கிரகமாய்த் துடித்திடும் காமினி
ஆவிகள் இங்ஙனமன்றோ பிறக்கின்றன?
ஆவியானால் பின்னில்லை இறப்பும்
இங்ஙனமன்றோ கவிதை பிறக்கிறது –
விம்மலில், வேதனையில், தேங்கலில்,
தோன்றலில்
யாருமில்லை யாருமில்லை யாருமில்லையென
நினைத்திட
அருமையாய் ஒரு காப்பியம் பிறக்கிறது.
நாவதின் தொட்டிலில் தாலாட்டுப் பாட்டு
நாடதின் ஊஞ்சலில் ஆனந்தமாடல்
நாம் அறியாத கனவாய் மாறுதல்
நாளைய மனிதனின் நாதமாய் பரவுது.

வாசல்கள் சாளரங்கள் தாழிட்டு பின்
வாசலும் பூட்டிக் கடந்துச் சென்ற பகல்
காவலாள் மட்டும் குரைப்பது தொலைவில்
காணாத திருடனைக் கண்டு பயந்ததால்
சற்றும் உறங்கிட இயலாது மௌனமாய்
ஒண்டியாய் முற்றத்தில் இளம்கோவடிகளோ?

# யாழ்ப்பாணத்தில் சாதி அமைப்பு

வ.ஐ.ச. ஜெயபாலன்



சாதிய எதிர்ப்பு கிளர்ச்சிகளை இடதுசாரிகளின் உதவியுடன் அமைப்பு ரீதியாக நெறிப்படுத்தும் முயற்சிகள் 1940களின் ஆரம்பத்திலிருந்து முதன்மை பெற்று 1943ல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையாக தோற்றம் பெற்றது. 50களின் ஆரம்பத்திலிருந்து தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர் மகாசபை முன்னெடுத்த போராட்டங்கள் பல்வேறு சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்ததுடன் சமூகப் பிரக்ஞையற்றிருந்த தமிழர் தேசிய இயக்கங் களையும் பாதித்தது. இக்கால கட்டத்தில் முன்னணியிலிருந்த தமிழ்த் தேசியவாதிகளுள், கோப்பாய் திரு.. கு வன்னியசிங்கமும், திருமலை திரு. இராஜவரோதயமும், அவர்களை ஆதரித்த தமிழ் ஆசிரியர்கள், எழுதுவினைஞர்களின் முன்னணிப் பிரிவினரும் தவிர்த்த ஏனைய பகுதியினர் அசல் யாழ்ப்பாணிகளாக வெள்ளாளரது நிலைப்பாட்டிலிருந்தே சாதிய பிரச்னையை அணுகினார்கள்.

1964ல் கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ சார்பு, சீனச்சார்பு என உடைந்தது. இதனால் சாதிய எதிர்ப்புப் போராட்ட அமைப்புக்களும் அவற்றின் மூல தந்திர உபாயங்களும்கூட இரு வேறுபட்டது. திரு. நா. சண்முகதாசன் தலைமையிலான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வழி நடத்தலுடன் திரு. எஸ்.ரி.என். நாகரத்தினம் அவர்களின் தலைமையில் இயங்கிய 'தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்'தினரின் வெகுசன அடிப்படையிலான, இலங்கை வரலாற்றிலேயே முன்னுதாரணமற்ற, துணிச்சல் மிக்க வன்முறைப் போராட்டம், மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசக் கிளையின் வழி நடத்தலுடன் திரு. எம்.சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தொடர்ந்தியங்கிய சிறுபான்மைத் தமிழர் மகாசபையினரின் சட்டரீதியான கிளர்ச்சி என்பவற்றின் பின்னணியில் பல நூற்றாண்டுகளாகத் தேங்கி நாற்றமெடுத்துக் கிடந்த யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார வரலாறு உடைப்பெடுத்துப் பெருகி ஓடத் தொடங்கியது. தமிழர்களின் மத்தியில் சமூக அரசியல் அணி மட்டுமன்றி கலாச்சார அணியும் உருவாக இச் சமூக விடுதலைப் போராட்டம் வழி வகுத்தது.

வெள்ளாளரின் பெரும்பான்மை அபிப்பிராயங்களை நிராகரித்து மோதல் நிலைகளுக்கு முகங் கொடுக்கத் தயாராகாமல், அடுத்து எந்த ஒரு கவடும் முன்னே எடுத்து வைக்க முடியாதிருந்த தருணத்தில், அதற்கு தயாராக எழுந்தவர்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர்தான்.

1960களை யாழ்ப்பாணத்து வரலாற்றின் திருப்பு முனையாக மாற்றியமைத்த இந்த மகத்தான போராட்டங்களின் விளைவாக யாழ்ப்பாணத்து சாதி அமைப்பின் கலாச்சார ரீதியான இறுக்கம் வெடித்து உடையத் தொடங்கியது.

உண்மையில் இன்று எஞ்சியிருக்கும் சாதிய ஒடுக்குதல்கள் தொடர்பான பிரச்சினைகளுள் முக்கியமானவை பஞ்சமர் சாதிப்பிரிவினரின் கீழ் வர்க்கத்தவர்களது

சமூக பொருளாதாரப் பிரச்சனைகளேயாகும்.

எல்லோருக்கும் குடியிருக்கும் நிலம் சொந்தமாகிற வகையிலும் குத்தகை விவசாயிகளது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிற வகையிலும் யாழ்ப்பாண மாவட்டத்திற்குப் பொருத்தமான விசேடமான நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் அவசியப்படுகிறது. உயர் கல்வி வாய்ப்புகள், நிலப் பங்கீடு, நிலம் சாராத - மரபு சாராத வேலை வாய்ப்புகள், மத்திய - உள்ளூர் ஆட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம், வேலைவாய்ப்புகள் என்பவை தொடர்பாக அவசியப்படுகிற குறைந்த பட்சக் காலகட்டம் வரை ஒடுக்கப்பட்ட சாதியினரின் கீழ் வர்க்கப் பிரிவினருக்கு விசேட முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

சிங்கள, இலங்கை தமிழ், தமிழகத் தமிழ் சாதி அமைப்பு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். கொவிகம, கரவா சாதியினரது உறவுகளும், வெள்ளாளர் கரையார் உறவுகளும், இலங்கையின் தெற்குக் கரையில் வாழும் பௌத்த கரவா சாதியினரதும் வடகரையில் வாழும் சைவக் கரையாரதும் சமூக பொருளாதார அரசியல் வரலாறும் ஒப்பீட்டு ஆய்வுக்கு உரியன.

இத்தகைய ஆய்வுகள் நமது சமூக பொருளாதார வரலாற்றினையும் அதன் இயங்கு திசைகளையும் புரிந்து கொள்வதற்கும் உதவும்.

## யாழ்ப்பாணியத்தின் தோற்றம்

### சமூக பொருளாதாரப் பின்னணி

சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் மாறுதல்களுக்கும் யாழ்ப்பாணம் ஆட்படத் தொடங்கிய காலக் கட்டம் 19ஆம் நூற்றாண்டுகளில் ஆரம்பிக்கிறது. பயிர்ச்செய்கை வர்த்தகமயமாதல் கல்வி பரவலாதல் வருமான மார்க்கம் தேடிய பொருளாதார புலப் பெயர்வுகள் என்பன தோற்றம் பெற்ற இந்த நூற்றாண்டு பற்றிய சமூக பொருளாதார ஆய்வுகள் அவசியம்.

வெளிவாரிப் புலப் பெயர்வுகளும், வெளியிலிருந்து செல்வம் யாழ்ப்பாணத்துள் பாய்ந்தமையும் யாழ்ப்பாணத்து வெள்ளாளர் மத்தியில் இயல்புக்கு மாறான வகையில் மத்தியதர வர்க்கத்தையும், கல்வியையும் விரிவாக்கியது. விரிவடைந்த மத்தியதர வர்க்கமும் கல்வியும் மேலும் கல்வியையும் பொருளாதாரப் புலப் பெயர்வுகளையும் தூண்டியது.

பொருள் தேடும் வேட்கையோடும் அதற்கான தகுதியோடும் இந்தியாவின் வட கிழக்கு எல்லைப் பிரதேசங்களுள் வங்காள மனிதன் புகுந்தது போல, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே ஏனைய தமிழ் சிங்கள பிரதேசங்களுள்ளும், மலையகத் தேயிலைத் தோட்டங்களை நோக்கியும், இலங்கையின் வெளியே, 'கிழக்காசிய நாடுகளை நோக்கியும் யாழ்ப்பாணத்து மனிதன் பெருகிப் பெருகிச் செல்லத் தொடங்கிய காலம் இது. தமிழகத்திலும் இக் காலகட்டத்தில் சைவ - தமிழ்க் காவலர்களாக யாழ்ப்பாண மனிதன் அறிமுகமாயிருந்தான்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெளியே வாழும் தமிழர்களால் 'யாழ்ப்பாணி' என வெறுப்போடும், அச்சத்தோடும், பிரமிப்போடும் பார்க்கப்பட்ட இந்த மனிதன்தான் தமிழகத்து மேல்வர்க்க வைதிகப் பிராமணர்களின் யாழப்பாணத்து சமூகப் பிரதி. 'யாழ்ப்பாணியம்'தான் இலங்கைத் தமிழர்களின் பிராமணியம்.

யாழ்ப்பாணியத்தைப் புரிந்துகொள்ள ஆறுமுகநாவலரையும் அவரது நேர், எதிர் பங்களிப்புகளையும் தெரிந்து கொள்வது அவசியம். இக் காலகட்டத்தில் ஏற்பட்ட சமூக பொருளாதார வளர்ச்சியும் சமூக மேம்பாடும் யாழ்ப்பாணத்து பல்வேறு உயர் சாதிச் சமூகங்களை உலுப்பியது. வெள்ளாளருடன் கலாசார ரீதியாக சமநிலையிலும் சமூக பொருளாதார ரீதியாக தாழ்ந்த நிலையிலும் இருந்த, மடப்பள்ளிகள், செட்டி, அகம்படியர், தவசிகள், தானத்தார், பரதேசிகள், தனக்காரர், வாணிபர் போன்ற சாதிப்பிரிவினரும் சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையத் தொடங்கினர். இம் மேம்பாடு மேற்படி மேற்தட்டுச் சுத்திரர் சாதியினர் வெள்ளாளருடன் ஒருங்கிணைந்து வெள்ளாளர் மயமாவதற்கு வழிவகுத்தது. இந்த ஒருங்கிணைவுகள் மூலம் ஏற்கனவே பெரும்பான்மைச் சமூகமாக இருந்த வெள்ளாளர் சமூகம் மேலும் விரிவடைந்து தொகை ரீதியாக யாழ்ப்பாண

குடாநாட்டின் சனத்தொகையின் சரிபாதிக்கும் சற்று அதிகமான நிலையை அடைந்தது.

1824ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி யாழ்ப்பாண மாவட்டத்துக் குடித்தொகையமைப்பில் வெள்ளாளரதும், பின்னர் வெள்ளாளருடன் இணைந்துவிட்ட சில சாதியினரதும் வீதம் பின்வருமாறு அமைந்திருந்தது. வெள்ளாளர் - 37, மடப்பள்ளி - 105, செட்டி - 4, தனக்காரர் - 15, பரதேசி -14.

வெள்ளாளரின் தொகை ரீதியான பெரும்பான்மைப் பலம். கல்வி, அதிகாரபலம், சாதி அடிப்படையிலான சமூக கலாச்சாரப் பலம் ஒரு புறத்திலும், மொத்தக் குடித் தொகையில் 50 வீதத்துக்கும் குறைவான ஏனைய சாதியினர் 20க்கும் மேற்பட்ட சாதியினராக பிளவு பட்டிருந்தமை மறுபுறமுமாக வெள்ளாளரின் கையை மேலும் பலப்படுத்தியது. வெள்ளாளர் தவிர்த்த கோவியர் போன்ற சூத்திரர் பிரிவைச் சேர்ந்த நடுத்தரச் சாதிகளும் பஞ்சமர் பகுப்புள் இடம் பெறாத தச்சர், கொல்லர், தட்டார் போன்ற பல்வேறு குடிமைச் சாதிகளும் பெரும்பாலும் வெள்ளாளருக்கு சார்புநிலை கொண்ட சாதிகளாகவே இருந்தன.

1960களில் நடுத்தரச் சாதியினராக மேம்பட்ட கோவியர்களில் கணிசமான பகுதியினர் வெள்ளாளருடன் சேர்ந்து தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களைத் தீவிரமாக எதிர்த்தனர். கோவியருள்ளும், சிவியார் போன்ற ஏனைய நடுத்தரச் சாதியினருள்ளும் படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் சோசலிசக் கட்சியான லங்கா சமசமாசக் கட்சி செல்வாக்குப் பெற்றிருந்தது. இன்று மேற்படி நடுத்தரச் சாதிகள் வெள்ளாளரால் உள்வாங்கப்படுகிற போக்குக் காணப்படுகிறது.

இந்த நிலைமை வெள்ளாளரது சாதிவாரியான காய் நகர்த்தல்களுக்கும் அவர்களது பிரித்து ஆதிக்கம் செலுத்தும் தந்திரோபாயங்களுக்கும் வாய்ப்பான ஒரு சூழலை ஏற்படுத்தியிருந்தது. வெள்ளாளரின் பிற்போக்கான பகுதியினர் இந்த வாய்ப்பை வரலாறு முழுவதிலும் நன்கு பயன்படுத்தினர்.

## நாவலர்


வெள்ளாளரின் காவலர்

இலங்கைத் தமிழர்கள் மத்தியில் சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத்தினதும் தமிழ் வளர்ச்சிப் பணிகளதும் தந்தையான ஆறுமுக நாவலர் ஆளவந்த அன்னியர்களது சமய அடிப்படையிலான கலாச்சார ஆதிக்க விரோதம், சுதேசிய கல்வித்துறை வளர்ச்சி, தமிழ் நூல் வளர்ச்சி என பல்வேறு துறைகளில் தனது முத்திரையைப் பதித்தவர். இது அவரின் முன்னேற்றமான பார்வையுள்ள முற்பக்க முகத்தைப் பற்றியது. அதே சமயம் அவரது சமூகம், வெள்ளாளரும், சமூக பொருளாதார மேம்பாட்டினால் வெள்ளாளருடன் தன்மயமாகி வருகிற சாதிகளும்தான். இவற்றுக்கு அப்பால் உள்ளவர்கள் நாவலரின் கண்களில் நிறை மனிதர்களாகத் தெரியவில்லை. சமகாலத்து சமூக பொருளாதார மாற்றங்கள் மீளா அடிமைச் சேற்றில் ஆழ்ந்து அல்லலுறும் அந்த மனிதர்களுக்கும் சென்று சேர்வதை தடுத்த பிற்போக்கு இயக்கமான யாழ்ப்பாணியத்தின் மூளையாகவும் அதன் தத்துவார்த்தத் தலைவராகவும் அமைந்தார். இது அவரது பின் நோக்கிய பார்வையுள்ள பிற்பக்க முகத்தைப் பற்றியது.

தன்னைப் பாதிக்கும் மேலாதிக்கப் போக்குகளுக்கு எதிராக நிமிர்ந்து போராடும் முன்நோக்கிய பார்வையுள்ள ஒரு முகமும், தனக்குக் கீழ்ப்பட்டவர்களை கொடுமையாக ஒடுக்கி அடக்கும் சமூகப் பிரக்ஞையற்ற பின்நோக்கிய இன்னொரு முகமும் கொண்ட நவீன யாழ்ப்பாணிகளின் முதற்சந்ததி ஆறுமுகநாவலருடன் தான் ஆரம்பிக்கிறது. ஆறுமுக நாவலரின் தலைமையிலான சைவத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் என்று குறிப்பிடப்படுகின்ற இயக்கத்தின் செயற்பாடுகளுடன்தான் யாழ்ப்பாணியக் கலாச்சாரம் தோற்றம் பெறுகிறது.

### துரும்பர்

***சாதிவாரி அடிமைகளின் சலவைத் தொழிலாளர்கள்! இவர்களின் காட்சியே தீட்டு எனக் கருதப்பட்டதால் இரவு நேரங் களில் மட்டும் நடமாட அனுமதிக்கப் பட்டனர். அதுவும்கூட தமது வருகை யைத் தெரிவிக்கவும், தமது காலடியை அழிப்பதற்குமாக காவோலையை இழுத்துக் கொண்டே அவர்கள் நடமாடவேண்டும்.***



## நேர் வழி

முன்னும் பின்னும் பாராதே
அக்கம் பக்கம் அசங்காதே
ராஜபாட்டைஉன் வழி
பட்டியிட்ட குதிரைபோல
நேரே செல்.
துன்பமில்லை
துயரமில்லை
எங்கும் இன்பம்
எதிலும் இன்பம
நீயே ராஜரிஷி
ஜனகனைப் போல்

- ஸ்ரீனிவாச ராஜகோபாலன்

சமகாலத்தில் சிங்களப் பகுதிகளில் தோற்றம் பெற்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் உயர்சாதி "கொவிகம" ஆதிக்கம் பெற்றிருந்த கண்டிப் பகுதிகளில் செல்வாக்குப் பெறவில்லை. கரவா, சலாகம, துராவ போன்ற கொவிகம அல்லாத சாதியினரும் செல்வாக்குப் பெற்றிருந்த கரையோரப் பகுதிகளிலேயே இந்த இயக்கம் முதன்மை பெற்றது. யாழ்ப்பாணத் தமிழரது சைவ மறுமலர்ச்சி இயக்கத்தைவிட அதிக சமூகப் பிரக்ஞையை பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் வெளிப்படுத்தியமையின் சமூகப் பின்னணியைப் புரிந்துகொள்ள இத்தகவல் உதவும். பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் உயர்ந்த சமூகப் பிரக்ஞையை வெளிப்படுத்தியபோதும் கத்தோலிக்கர் விரோதம், முஸ்லிம் விரோதம், தமிழர் விரோதம், இந்திய விரோதம் என்ற வகையில் நவீன சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடிப்படை அம்சங்களைப் பிறப்பித்தது. நவீன சிங்களப் பேரினவாதி இங்கிருந்துதான் தோற்றம் பெற்றான்.

சிறு தெய்வ வழிபாடும் கிராமியச் சடங்குகளும் நிறைந்த, பரந்துபட்ட, சாதிவாரியாக பல்வேறுபட்ட மக்களது பங்குபற்றலும் கொண்ட யாழ்ப்பாணத்து சமய அமைப்பை ஆறுமுகநாவலர் பிராமணர் தலைமையில் ஆகம மயப்படுத்தினார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் பிராமணர் தலைமைக்கும் ஆகமக் கட்டுக்கோப்புகளுக்கும் வெளியே, சிறு தெய்வ வழிபாட்டு அடிப்படையில் கிராமியக் கலை கலாச்சார மையங்களாக இயங்கிவந்த கோவில் வழிபாட்டு அமைப்பு இந்த இயக்கத்தினால் தகர்த்து எறியப்பட்டது. தமிழகத்திலிருந்து கோவில் பூசகர்களான நிலவுடைமையற்ற கீழ்வர்க்க பிராமணர்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கோட்பாட்டு ரீதியாக யாழ்ப்பாணத்து சாதி சமய கலாச்சார அமைப்பின் கொடுமுடியில் பிராமணர்களை இருத்திய வெள்ளாளன் நடைமுறையிற் தனது உடைமையான கோவில்களிற் சேவை செய்யும் பணியாளனாகவே அவர்களைக் கீழ்ப்படுத்தி வைத்தான். கோட்பாட்டு ரீதியாக வெள்ளாளரை விட மேம்பட்டவர்களாகவும் நடைமுறையில் வெள்ளாளர்களின் பணியாளர்களாகவும் வாழ்ந்த இந்தப் பிராமணர்களை எந்த வகையிலும் தமிழகப் பிராமணர்களின் மேல் வர்க்கத்துடன் ஒப்பிட முடியாது. அதிர்ஷ்டவசமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்துக் கோவில்களை இந்த ஆகம மயப்படுத்தும் முயற்சி பாதிக்கவில்லை. கோவில் கலாச்சாரமாக கிராமியக் கலைகள், கிராமிய வாத்தியங்கள் - உடுக்கு - பறை கிராமிய இசைகளுக்குப் பதிலாக தமிழகத்து உயர் கலைகளான கர்நாடக சங்கீதம், தவில் - நாதஸ்வர வாத்திய இசை, தேவதாசிகளின்

## கோவியர் - ஓவியர்

**நூற்றாண்டு காலமாக இடம்பெற்று வருகின்ற சமூகமேம்பாடுகளின் பின்னரும் கூட வர்க்க அமைப்பு அதிமேல் அதி கீழ் மட்டங்களில் சாதி அமைப்புடன் ஒத்து வருகிற தன்மை பெரிதும் பாதிக்கப்பட வில்லை. பாதிப்படைந்து வருகிற நடுத்தர வர்க்க மட்டங்களில்தான் சாதி ஒடுக்குதலுக் கெதிரான கிளர்ச்சிகளும், சாதிவாரியான அரசியல், பொருளாதார வாய்ப்புகளுக் கான போட்டிகளும் வெளிப்பட்டு வந் திருக்கிறது.**

பரதநாட்டியம் என்பன புகுத்தப்பட்டன. இதனால் நட்டுவர் போன்ற சாதிவாரிக் கலைஞர்களின் தேவையையும் வரவையும் அதிகரித்தது. இது ஒரு புறத்தில் குறிப்பிடத்தக்க கலாச்சாரப் பங்களிப்பேயாகும். ஆனால் இந்த உயர் கலைகளை பரந்துபட்ட யாழ்ப்பாணத்து மக்களது கிராமியக் கலை கலாச்சாரத்திற்கு பிரதியீடாகவும் மேட்டுக் குடியினரின் கலாச்சாரமாகவும் புகுத்தி மக்கள் கலைகள் இழிசனர் வழக்காகக் கழித்து ஒதுக்கியமை பரந்துபட்ட மட்டத்தில் யாழ்ப்பாணத்தை கலாச்சாரப் பாலைவனமாக்கியது. பரந்துபட்ட மக்களின் கலைகலாச்சாரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தையும் மட்டக்களப்பையும் ஒப்பிட்டு ஆராய்கிற ஒருவர் இக்கருத்தையும் ஒத்துக் கொள்ளவே செய்வார்.

## சாதிவாரியான யாழ்ப்பாணத்து ஆதிக்க சக்திகள்

### வெள்ளாளரும் சைவக்கரையாரும்.

யாழ்ப்பாண சமூக பொருளாதார வரலாற்றின் புறநடையாக, வெள்ளாளர் மயமாகாமலேயே யாழ்ப்பாணிகளாக அங்கீகரிக்கப்பட்டு பலம் பெற்ற சைவக்கரையார்களது எழுச்சியைக் குறிப்பிடலாம்.

வெள்ளாளரால் நிர்ணயிக்கப்பட்ட சமூக பொருளாதார கலாச்சார அமைப்பில் சாதிவாரி மீனவ சமூகங்கள், தொகை ரீதியாகச் சிறுபான்மையாகவும் கலாச்சார ரீதியாக வெள்ளாளருடன் ஒப்பிடும் போது பிற்படுத்தப்பட்டவர்களாகவும் இருந்தனர். எனினும் இவர்கள் சொத்துடைமை உள்ளவர்களாகவும் வெள்ளாளரில் தங்கியிருக்காதவர்களாகவும், வெள்ளாளரைப்போலவே தமக்குக் கீழ்ப்பட்டவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் இருந்தனர். கரையாரில் பெரும்பகுதி கத்தோலிக்கராகப் பிரிந்து போனமை சைவக்கரையாரை சாதிவாரியாக மேலும் சிறுபான்மையினராக்கியது. யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவிய முரண்பாடுகள் மோதல்கள் ஒரு புறத்திலும், தொழில்வாரியாக மீன்பிடித்தல் மட்டுமன்றி ஆரம்பத்திலிருந்தே சட்டரீதியானதும் சட்டமறுப்பானதுமான கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தமை மறுபுறத்திலுமாக அவர்களை இறுக்கமானதும், செயல்த்திறன் மிக்கதும், போர்க்குணம் உள்ளதுமான வகையில் நிறுவனமயப்படுத்தியிருந்தது.

முரண்பாடுகளின் மத்தியிலும் யாழ்ப்பாணத்து வெள்ளாளரையும் சைவக் கரையாரையும் இணைக்கும் வலுவான கலாசார அம்சங்களாக சைவமும், தமிழ் இனத்துவ வளர்ச்சியும் அமைந்தது. தொழில் ரீதியாகவும் சைவக்கரையாரின் கடல் வாணிபப் பண்டங்களின் விற்பனையாளர்களாக நவீன யாழ்ப்பாணச் சமூகத்தின் பலமான அங்கமான வெள்ளாள வர்த்தக முதலாளிகளே அமைந்தனர். இந்த இணைப்புகள் ஓரளவில் சைவக்கரையாருக்கு பல்வேறு துறைகளில் வெள்ளாளரது அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்து.

எனினும் 1950களில், அரசியலில், தமிழுக்கு எதிரான இன வன்முறையும், காவற்படையினரின் அத்துமீறல்களும் ஆரம்பித்த காலங்களிலிருந்தே சைவக் கரையாருக்கும் வெள்ளாளருக்கும் இடையே, உறவு நிலையில் புதிய பரிமாணங்கள் ஏற்பட்டு வளர ஆரம்பித்தன.

சட்டமறுப்பு, போர்க்குணம், இறுக்கமான சமூக பொருளாதார அமைப்பு என்பவற்றைக் கொண்டிருந்த சைவக் கரையாரை வெள்ளாளர் மத்தியில் தமது காவலர்களாகவும் அவர்களது பிரதேச மையமான வல்வெட்டித்துறையை தமது காவல் அரணாகவும் பார்க்கிற போக்கு 1958ஆம் ஆண்டுக் கலவரங்களின்போது தோற்றம் பெற்று 1970களில் வலிமை பெறத் தொடங்கியது.

இதுதான் 1950களிலேயே சைவக் கரையார் வெள்ளாளர்மயப்படாமல் வெள்ளாளர் மயப்பட்ட யாழ்ப்பாணி சமூகத்தின் பலமான ஒரு அங்கமாக மாறிய கதை.

### சலாகம

***இனவாரியாகவும் சாதிவாரியாகவும் சிங்கள மயமாகிவிட்ட தென்னிந்திய சாதிகள்: சலாகம, தமிழகத்தை சேர்ந்த சாலையரின வம்சா வழியினர். இவர்களுள் பெரும்பகுதியினர் டச்சுக்காரர்களால் கறுவாப்பட்டை உரிப்பதற்காக குடி பெயர்த்து கொண்டு வரப்பட்டவர்கள்.***